**ABSTRACT**

Forests – Wildlife – Notification of Thanthai Periyar Wildlife Sanctuary, Erode District under section 26 A (1) (b) of the Wild Life (Protection) Act, 1972 (Central Act 53 of 1972) – Orders - Issued.

---

**Environment, Climate Change and Forests (FR.5) Department**

**G.O.(Ms) No.19** **Dated: 30.01.2024**

சோபகிருது வருடம் தை 16
திருவள்ளுவர்ஆண்டு - 2055

**Read:**

From the Principal Chief Conservator of Forests and Chief Wildlife Warden, Letter No.WL5/41800/2021, dated 15.11.2023.

******

**ORDER**: -

The Government of Tamil Nadu had made the following announcement in the Budget 2023-2024:-

> "A contiguous stretch of protected forests is essential to protect endangered wildlife. The Government will notify a new wildlife sanctuary '**Thanthai Periyar Wildlife Sanctuary**', with an extent of 80,567 hectares in the forest areas of Anthiyur and Gobichettipalayam taluks in Erode district to link the Nilgiris Biosphere Reserve with Cauvery South Wildlife Sanctuary. This will be the 18th Wildlife Sanctuary in the State".

2. Accordingly, the Principal Chief Conservator of Forests and Chief Wildlife Warden, in the letter read above, has sent a proposal along with the draft Notification for the declaration of Thanthai Periyar Wildlife Sanctuary in Erode District to the extent of 80,114.80 Ha. (or) 801.148 Sq.km under section 26-A(1)(b) of the Wild Life (Protection) Act, 1972.

3. The forests of Bargur Hills in Erode District occupy a prominent position in the Eastern Ghats as they merge with the Western Ghats at the Nilgiris. This vast landscape is home to diverse flora and fauna, making it an ideal habitat for various life forms. The landscape is interconnected to the Kollegal forests of Karnataka State and

the Nilgiris District in Tamil Nadu, creating one of the most diverse habitats in the region. It is a critical area that needs to be conserved to preserve the variety of life that inhabits it.

4. This region is part of the corridor that connects the Sathyamangalam Tiger Reserve to the Male Mahadeshwara Hills Tiger Reserve and Cauvery Wildlife Sanctuary and plays a crucial role in maintaining a viable tiger population. The landscape is one of the tiger corridors identified by the National Tiger Conservation Authority and holds a number of tigers. This landscape facilitates unhindered genetic exchange between geographically isolated populations of tigers, thereby maintaining a healthy population and genetic diversity.

5. This region is also part of the Nilgiris Elephant Reserve and is home to a healthy population of large herbivores like elephants and Indian Gaur. Importantly, this landscape is the catchment of the Palar River that drains into the Cauvery River and is a crucial source of water for agricultural activities. Additionally, it is a natural sandal-bearing belt and an active sandal regenerating area. It also holds cultural and historical importance for the tribal and local communities who depend on these ecosystems for their livelihoods and traditional practices. The Bargur Hills are, undeniably, a treasure trove of nature's bounty that must be preserved and protected for future generations.

6. The proposal to declare these reserved forests as a Wildlife Sanctuary is a significant move that would allow for the creation of a contiguous network of Protected Areas, thereby providing uniform legal status and protection to the landscape. The region is home to an abundance of biodiversity, including 70 butterfly species, 35 fish species, 10 amphibian species, 25 reptile species, 5 terrestrial invertebrate species, 233 bird species, and 48 mammal species. The strategic location, ample availability of resources, and diverse climates and altitudes make this landscape an ideal habitat for a wide range of flora and fauna.

7. The Government therefore have decided to notify the reserved forests located in Bargur Hills, Erode District, measuring 80,114.80 Ha. (or) 801.148 Sq.Kms, as the "Thanthai Periyar Wildlife Sanctuary" under Section 26 A(1)(b) of the Wild Life (Protection) Act, 1972 (Central Act 53 of 1972). Accordingly, the Notification appended to this order will be published both in English and Tamil in the Tamil Nadu Government Gazette and in Tamil in the District Gazette of Erode District.

8. The Works Manager, Government Central Press, Chennai, is requested to send 25 copies of each of the Notification to the Government, the Principal Chief Conservator of Forests / Principal Chief Conservator of Forests and Chief Wild Life Warden and the Collector of Erode District as soon as the Notification is published.

(BY ORDER OF THE GOVERNOR)

**SUPRIYA SAHU**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

To
The Works Manager,
Government Central Press, Chennai-79.(w.e)
The Principal Chief Conservator of Forests(HOFF), Chennai-32.
The Principal Chief Conservator of Forests and
Chief Wildlife Warden, Chennai-32.
The Conservator of Forest and Field Director, Sathyamangalam Tiger Reserve, Sathyamangalam.
The District Collector, Erode District.
The District Forest Officer, Erode.
The Secretary to Government of India,
Ministry of Environment, Forests and Climate Change,
(CS.I Division), 5th Floor, Vayu Wing,
Indira Paryavaran Bhawan,
Jor Bagh Road, New Delhi – 110 003.

**Copy to:-**
The Private Secretary to Secretary-IV to Chief Minister, Chief Minister's Office, Chennai-9.
The Special Personal Assistant to Chief Minister, Chief Minister's Office, Chennai-9.
The Spl. P.A.to Hon'ble Minister (Forests), Chennai-9.
The Private Secretary to Additional Chief Secretary to Government,
Environment, Climate Change and Forests Department, Chennai-9.
The Environment, Climate Change and Forests (FR.7) Department, Chennai-9.
The Tamil Development and Information Department, Chennai-9.
The Law Department, Chennai – 9.
Stock File/Spare copy.

//FORWARDED BY ORDER//

P. Sel.. 30.1.24
SECTION OFFICER
30.1.24

## APPENIX

## NOTIFICATION

**WHEREAS,** the Reserve forest areas of Anthiyur taluk of Erode district, as specified in the Schedule, are located between the Sathyamangalam Tiger Reserve in Tamil Nadu, the Male Mahadeshwara Wildlife Sanctuary and the Cauvery Wildlife Sanctuary in the State of Karnataka. The area has adequate ecological, faunal and floral significance and should be managed as a wildlife sanctuary for protecting and conserving wildlife habitat and to mitigate human wildlife conflict;

**AND WHEREAS,** the reserved forest areas of the Anthiyur taluk of Erode district are a complex hilly tract and form an important part of the Eastern Ghats before they meet the Western Ghats at the Nilgiris;

**AND WHEREAS,** the area specified in the Schedule will form a large, contiguous network of protected areas, enabling uniform legal status and protection in this landscape. This landscape maintains continuity from Cauvery Wildlife Sanctuary in the State of Karnataka to the Nilgiri Biosphere through Sathyamangalam Tiger Reserve and Biligiri Rangaswamy Temple Tiger Reserve. This provides sufficient area for the conservation of the varied and rich biodiversity of the region;

**AND WHEREAS**, the area specified in the Schedule is a vast elephant landscape comprised of diverse flora and fauna. The landscape is connected to the Nilgiris and the Kollegal forests of the State of Karnataka, which further connect to the Wyanaad and Cauvery forests scapes, respectively, making it one of the most diverse habitats for various life-forms;

**AND WHEREAS**, the area specified in the Schedule is the heart of this contiguous and diverse landscape. It forms an important corridor connecting Sathyamangalam Tiger Reserve to Male Mahadeshwara Wildlife Sanctuary and Cauvery Wildlife Sanctuary, respectively, making it a landscape crucial for healthy tiger populations;

**AND WHEREAS**, the area specified in the Schedule facilitates unhindered genetic exchange among many species and forms the nuclear axis of the conservation of species in the entire wildlife habitat. It is an important corridor for the dynamic tiger populations migrating to the Male Mahadeshwara Wildlife Sanctuary and Cauvery Wildlife Sanctuary, and this forest area is one of the tiger corridors approved by the National Tiger Conservation Authority (NTCA) and it holds a significant tiger population;

**AND WHEREAS,** the area specified in the Schedule has a good diversity of flora and fauna, such as fish, amphibians, reptiles, birds, and mammals. There are about 70 species of butterflies, 35 species of fish, 10 species of amphibians, 25 species of reptiles, 5 terrestrial invertebrates, 233 species of birds and 48 species of mammals reported;

**AND WHEREAS,** significant populations of large herbivores have been recorded in this region, and the areas are part of the Nilgiris-Eastern Ghats Elephant Reserve (Nilgiri Elephant Reserve);

**AND WHEREAS,** the area specified in the Schedule is an important catchment of the Palar River that drains into the Cauvery River at Stanley Reservoir and it is an important source of water for agriculture. It is an important natural sandal-bearing belt and an actively sandal-regenerating forest;

**NOW, THEREFORE,** in exercise of the powers conferred by clause (b) of sub-section (1) of section 26-A of the Wild Life (Protection) Act, 1972 (Central Act 53 of 1972), the Governor of Tamil Nadu, having considered that the area, the boundaries of which are specified in the Schedule below, is of adequate ecological, faunal, floral, natural and zoological significance, for the purpose of protecting, propagating and developing Wildlife and its environment, hereby declares that the areas specified in the Schedule below, shall be a Sanctuary, namely Thanthai Periyar Wildlife Sanctuary with effect on and from 30.01.2024.

## THE SCHEDULE

| | | | |
|---|---|---|---|
| 1. | Name of the District | : | Erode |
| 2. | Name of the Taluks | : | Anthiyur |
| 3. | Name of the Sanctuary | : | Thanthai Periyar Wildlife Sanctuary |
| 4. | Area of the Sanctuary | : | 80,114.80 Hectare or<br>801.148 Square Kilometer |

## DETAILS OF RESERVED FORESTS FORMING THE SANCTUARY

| Sl. No. | Name of the reserved forest | Total extent of the reserved forest (in hectares) | Extent of sanctuary after excluding roads, paths, and habitation enclosures (in hectares) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | North Bargur reserved forest | 47,593.39 | 47,323.50 |
| 2 | South Bargur reserved forest | 24,880.99 | 24,736.80 |

| | | | |
|---|---|---|---|
| 3 | Thamaraikarai reserved forest | 3,066.55 | 3,037.37 |
| 4 | South Bargur reserved forest (Part 844) | 2,530.02 | 2,521.28 |
| 5 | Ennamangalam reserved forest | 2,270.33 | 2,269.37 |
| 6 | Nagalur reserved forest | 226.48 | 226.48 |
| | **Total Extent** | **80,567.76** | **80,114.80** |

## BOUNDARY DESCRIPTION

**North.** – The boundary starts from cairn No. 1 at the point where the Anthiyur – Kollegal road crossed the Palar River and the line generally runs along the south bank of the Palar River till it reaches the common tri-junction point of North Bargur reserved forest in Erode district, Emmanur hamlet of No. 32 Nagamarai Village in Dharmapuri district, and No.01. Kaveripuram village in Salem district.

**East.**– Thence, the boundary generally runs towards the south along the western boundary of No. 01 Kaveripuram village and Pachapalamalai reserved forest and reaches the tri-junction point of Pachapalamalai reserved forest and No. 02. Lakkampatti village in Salem district and North Bargur reserved forest in Erode District. Thence, the boundary generally runs towards the east along the northern boundary of No. 02 Lakkampatti village and turns south along the western boundaries of No. 02 Lakkampatti village, turning east and northeastward along the southern and southwestern boundaries of No. 02. Lakkampatti village reaches the junction point of Pachapalamalai reserved forest and 02. Lakkampatti Village in Salem district. Thence, the boundary runs towards the south-east along the common boundary between Pachapalamalai reserved forest in Salem District and North Bargur reserved forest in Erode district and reaches the junction point of Pachapalamalai reserved forest and No. 06. Alamarathupatty village in Salem district. Thence, the boundary runs towards the south-east along the northeastern boundary of No. 06. Alamarathupatty village and turns south along the western boundary of No. 06. Alamarathupatty village and reaches the junction point of No. 06. Alamarathupatty village in Salem district and No. 02. Komarayanur village in Erode District. Thence, the boundary generally runs towards the southwest along the northwest boundary of No. 02. Komarayanur village.

**South.**–Thence the boundary generally runs southwest along the northern boundaries of No. 03. Pudur village, No 04. Chennampatti village and reaches the junction point of No. 04. Chennampatti village and No. 06. Vellitirupur village. Thence, the boundary generally runs towards the southwest along the northern boundary of No. 06. Vellitirupur village and turns towards the north, then runs along the village's northern, western, and southwestern boundaries. Then, it turns south along the northwestern and northern boundaries of No. 07 Mathur village.Thence, the boundary generally runs towards the east along the northern boundary of No. 08 Ennamangalam

village, turns towards the north, and then runs along the eastern, northern, western, and then northern boundaries of 08 Ennamangalam village. Thence, the boundary continues towards the east along the northern boundaries of No. 08 Ennamangalam village, 09. Sankarapalayam village, No. 11. Anthiyur village, No. 12. Nagalur village, and No. 13 Athani village.Thence the boundary runs towards the east along the northern, eastern, and northeastern boundaries of No. 11. Perumugai village. Thence, it runs towards the west along the northern boundaries of No. 10. Kanakkampalayam village.

**West.**– Thence, the boundary runs towards the north along the common boundary between Guthiyalathur reserve forest and South Bargur reserved forest. Thence it generally runs towards the north along the common boundaries between Guthiyalathur reserved forest and South Bargur (Part) reserved forest. Thence it runs towards the north along the common boundaries between Guthiyalathur reserved forest and North Bargur reserved forest and reaches the south-western corner of No. 02. Koothampalayam village. Thence It generally runs towards north along the eastern boundary of No. 02.Koothampalayam village and reaches the northeastern corner of the said village along the Tamil Nadu – Karnataka interstate border. The boundary continues towards the northeast along the south bank of the Palar River before turning south near Guddaiyur hamlet. It runs along the western, southern, southeast and northeastern boundaries of Guddaiyur hamlet and rejoins the interstate boundary along the river Palar. Thence the boundary generally follows the river Palar, which is the interstate boundary between the State of Tamil Nadu and Karnataka, leaving the hamlets of Mattimarathahalli and Velampttai, which are situated on the south bank of the river Palar, until it reaches the starting point.

**EXCLUSIONS**

The following roads, paths and enclosures shall be excluded from the Thanthai Periyar Wildlife Sanctuary: -

**(I) <u>Roads and Paths</u>:**

**Roads and Paths**

| **Sl. No.** | **Starting from (with Geocoordinates)** | **Up to (with Geocoordinates)** | **Length (in Km)** | **Width (in meters)** |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| (i) | Forest Check Post Chellampalayam (South Bargur reserved forest)<br><br>Lat : N 11.66623°<br>Long : E 77.57258° | Palar River (North Bargur reserved forest)<br><br>Lat : N 11.94197°<br>Long : E 77.49321° | 34.15 | 7.50 |
| (ii) | Ennamangalam Village S.F.No2/2<br><br>Lat : N 11.65720°<br>Long : E 77.56742° | Kakkayanurtribal habitation (South Bargur reserved forest)<br><br>Lat : N 11.66443°<br>Long : E 77.55931° | 1.46 | 7.50 |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | Anthiyur (A) Village<br>S.F.No.196/4<br>Lat : N 11.63403°<br>Long : E 77.54913° | Kinatthadi tribal habitation<br>(South Bargur reserved forest)<br>Lat : N 11.63824°<br>Long : E 77.54691° | 0.54 | 7.50 |
| (iv) | Karumbarai Village<br>Lat : N 11.55806°<br>Long : E 77.45353° | Doddacombai tribal habitation<br>(South Bargur reserved forest)<br>Lat : N 11.57955 °<br>Long : E 77.45925 ° | 2.43 | 7.50 |
| (v) | Thamaraikarai Village<br>Lat : N 11.76438°<br>Long : E 77.56465° | Devarmalai Village<br>(Thamaraikarai reserved forest)<br>Lat : N 11.77074°<br>Long : E 77.59503° | 4.47 | 7.50 |
| (vi) | Thamaraikarai Village<br>Lat : N 11.77964°<br>Long : E 77.54688° | Sundapur Village<br>(Thamaraikarai reserved forest)<br>Lat : N 11.78888°<br>Long : E 77.56094° | 2.49 | 7.50 |
| (vii) | Thamaraikarai Village<br>Lat : N 11.76641°<br>Long : E 77.55497° | Periya Sengulam Village<br>(South Bargur Part reserved forest)<br>Lat : N 11.73446°<br>Long : E 77.49270 ° | 11.33 | 7.50 |
| (viii) | Dholli Village Pirivu<br>Lat : N 11.76772°<br>Long : E 77.54482° | Dholli Village<br>(Thamaraikarai reserved forest)<br>Lat : N 11.77270°<br>Long : E 77.53343° | 1.64 | 7.50 |
| (ix) | Thalakarai Village Pirivu<br>Lat : N 11.75942°<br>Long : E 77.53248° | Thalakarai Village<br>(Thamaraikarai reserved forest)<br>Lat : N 11.75459 °<br>Long : E 77.53216 ° | 0.55 | 7.50 |
| (x) | Thurusanampalayam Village<br>Lat : N 11.82286°<br>Long : E 77.54411° | Solaganai Village<br>(North Bargur reserved forest)<br>Lat : N 11.85056°<br>Long : E 77.57989 ° | 7.31 | 7.50 |
| (xi) | Achappan kovil<br>Lat : N 11.73280 °<br>Long : E 77.67253 ° | Ullur Thanda (North Bargur reserved forest)<br>Lat : N 11.80987°<br>Long : E 77.70179° | 10.6 | 7.50 |

| | | | | |
|---|---|---|---|---|
| (xii) | Link Road Bargur | Sundapur Road Junction (North Bargur reserved forest) | 16.17 | 7.50 |
| | Lat : N 11.84243°<br>Long : E 77.63485° | Lat : N 11.78116°<br>Long : E 77.55293° | | |
| (xiii) | Karikadu | Palar Bridge<br>(North Bargur reserved forest) | 4.83 | 7.50 |
| | Lat : N 11.93005° Long<br>: E 77.67993° | Lat : N 11.95384°<br>Long : E 77.64960° | | |
| (xiv) | Kaveripuram Village<br>S.F.No.509 | NadukavalThittu<br>@ Kathirimalai tribal settlement<br>(North Bargur reserved forest) | 6.93 | 7.50 |
| | Lat : N 11.90096°<br>Long : E 77.68271° | Lat : N 11.89938°<br>Long : E 77.65152° | | |
| (xv) | Ullurthanda (North Bargur reserved forest) | Anthiyur – Kollegal Highway | 28.91 | 7.50 |
| | Lat : N 11.83656°<br>Long :E 77.65410° | Lat : N 11.93413°<br>Long : E 77.49735° | | |
| (xvi) | Guddaiyur Village | Makkampalayam Village<br>(North Bargur reserved forest) | 2.90 | 7.50 |
| | Lat : N 11.77032° N<br>Long : E 77.43517° E | Lat : N 11.75089°<br>Long : E 77.42571° | | |
| (xvii) | Velampatti Village | Mathimarathalli Village<br>(North Bargur reserved forest) | 2.82 | 7.50 |
| | Lat : N 11.89149° N<br>Long : E 77.47555° E | Lat : N 11.88244°<br>Long : E 77.46111° | | |
| (xviii) | Thamaraikarai – Kongadai Road | Thammuretti<br>(South Bargur Part reserved forest) | 0.12 | 7.50 |
| | Lat : N 11.74146° N<br>Long : E 77.49910° E | Lat : N 11.74251°<br>Long : E 77.49941° | | |
| (xix) | Thamaraikarai – Kongadai Road | Onnakarai road<br>(South Bargur Part reserved forest) | 0.20 | 7.50 |
| | Lat : N 11.74915° N<br>Long : E 77.50569° E | Lat : N 11.75087°<br>Long : E 77.50603° | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (xx) | Madam<br>(South BargurReserved forest)<br><br>Lat : N 11.73500° N<br>Long : E 77.63087° E | Anaipodu<br>(North Bargur Reserved forests)<br><br>Lat : N 11.73974°<br>Long : E 77.63407° | 0.84 | 5.50 |
| (xxi) | Senkulam<br><br>Lat : N 11.73283° N<br>Long : E 77.46219° E | Guddaiyur (North Bargur reserved forest)<br>Lat : N 11.77267°<br>Long : E 77.44154° | 6.43 | 5.50 |

**(ii) TRIBAL ENCLOSURES**

| Sl. No. | Name of the tribal habitations | Name of the reserved forest | Extent (in hectares) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | Thamarakarai | Thamarakarai reserved forest | 16.82 |
| 2 | Sholaganai | North Bargur reserved forest | 140.50 |
| 3 | Nadukaval Thittu | North Bargur reserved forest | 54.00 |
| 4 | Kakkayanur | South Bargur reserved forest | 45.00 |
| 5 | Kinatthadi | South Bargur reserved forest | 16.80 |
| 6 | Doddacombai | South Bargur reserved forest | 69.00 |
| | **Total Area under Tribal Settlements** | | **342.12** |

**GENERAL:-**

The admitted rights mentioned in the notifications issued under Section 16 of the Tamil Nadu Forest Act, 1882 ( Tamil Nadu Act V of 1882) for declaring forests to be reserved in the area that now forms part of this Sanctuary and the rights conferred under the Scheduled Tribes and Other Traditional Forest Dwellers (Recognition of Forest Rights) Act, 2006 (Central Act 2 of 2007) shall remain and continue to be enjoyed by the persons concerned.

**Supriya Sahu**
**Additional Chief Secretary to Government**

**//True copy//**

P. Sahi 30.1.24
**Section Officer**
30.1.24

## பிற்சேர்க்கை

## அறிவிக்கை

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டத்தில் உள்ளதும், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான காப்புக்காடு பகுதிகள், தமிழ்நாட்டின் சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், கர்நாடகா மாநிலத்தில் உள்ள மலை மாதேஸ்வரா வனஉயிரின சரணாலயம் மற்றும் காவிரி வன உயிரின சரணாலயம் ஆகியவற்றுக்கு இடையே அமைந்துள்ளது. இப்பகுதி சூழலியல், தாவர மற்றும் வனவிலங்கு வாழ்விட முக்கியத்துவம் வாய்ந்தபகுதியாகும். இந்த வன உயிரினங்களின் வாழ்விடத்தைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் மற்றும் மனித வனஉயிரின மோதலைத் தணிக்கும் நோக்கங்களுக்காகவும் இப்பகுதி வன உயிரின சரணாலயமாக நிருவகிக்கப்பட வேண்டும்;

**மேலும்**, ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டத்தில் உள்ள காப்புக்காட்டு பகுதிகள் தொடர்ச்சியான மலைக் குன்றுகளால் இணைக்கப்பட்ட மலைப்பகுதியாகவும், கிழக்கு மலைத் தொடர், மேற்கு மலைத் தொடர் நீலகிரியில் இணைவதற்கு முன் உள்ள முக்கியமான மலைப் பகுதியாக உள்ளது;

**மேலும்**, இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள், அதனை தொடர்ந்து அமைந்துள்ள பிற பாதுகாக்கப்பட்ட வனஉயிரின வாழ்விடங்களோடு இணைக்கப்படுமாயின், இந்த நிலப்பரப்பு அனைத்தும் ஒரே மாதிரியான சட்ட ரீதியான பாதுகாப்பு பெற்ற வன உயிரின வாழ்விடப் பகுதியாக அமையும். இப்பகுதிகள் கர்நாடக மாநிலத்தில் உள்ள காவேரி வன உயிரின சரணாலய பகுதிகளை நீலகிரி உயிர்கோள காப்பகத்திற்குட்பட்ட சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், கர்நாடக மாநிலத்தில் உள்ள பிலிகிரி–ரங்கசாமி கோவில் புலிகள் காப்பகம் போன்றவற்றை இணைத்து ஒரு தொடர்ச்சியான வனஉயிரின வாழ்விட நிலப்பரப்பாக ஏற்படுத்தும். இதன் மூலம் மாறுபட்ட மற்றும் செழுமையான பல்லுயிர்த்தன்மை பாதுகாக்கப்படுவதற்கான சூழல் ஏற்படுத்தப்படும்;

**மேலும்**, இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள், பல்வேறு தாவரங்கள், வனவிலங்குகள் நிறைந்த யானைகளின் முக்கிய வாழ்விட பகுதியாகும். இந்நிலப்பரப்பு நீலகிரியை அடுத்துள்ள கேரளா மாநிலத்தில் உள்ள வயநாடு மற்றும் கர்நாடகா மாநிலத்தில் உள்ள காவேரி வனப்பகுதிகளுடன் இணைக்கும் முக்கிய பிணைப்பாக உள்ளது. இது வேறுபட்ட வாழ்விடப் பகுதியாகவும் பல்வேறு உயிரினங்களின் முக்கிய வாழ்விடப் பகுதியாகவும் உள்ளது;

**மேலும்**, இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள், இந்த தொடர்ச்சியான மற்றும் மாறுபட்ட வன உயிரின வாழ்விட நிலப்பரப்பின் மையமாக உள்ளது. இப்பகுதி சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தை முறையே மலை மாதேஸ்வரா வன உயிரின சரணாலயம் மற்றும் காவிரி வன உயிரின சரணாலயத்துடன் இணைக்கும் ஒரு முக்கியமான வழித்தடத்தை உருவாக்கி, புலிகளின் வளமான வாழ்விட பகுதியான நிலப்பரப்பாக அமைகிறது;

**மேலும்**, இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள், பல உயிரினங்களுக்கிடையில் தடையற்ற மரபணு பரிமாற்றத்தை எளிதாக்குவதுடன் மற்றும் முழு வன உயிரின நிலப்பரப்பிலும் வன உயிரினங்களின் பாதுகாப்பிற்கான

மையத்தினை உருவாக்குகிறது. மலை மாதேஸ்வரா வன உயிரின சரணாலயம் மற்றும் காவேரி வன உயிரின சரணாலயம் ஆகியவற்றிற்கு இடையே இடம்பெயர்ந்து வரும் புலிகளின் முக்கிய வழித்தடமாக இப்பகுதி உள்ளது. மேலும், இந்த வனப்பகுதி தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட புலிகள் வழித்தடங்களில் ஒன்றாவதுடன், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான புலிகளின் வாழ்விடமாகவும் உள்ளது;

**மேலும்**, இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள், செழுமையான பன்முகத்தன்மை கொண்ட தாவரங்கள் மற்றும் வன உயிரினங்களான மீன்கள், இருவாழ்விகள், ஊர்வன, பறவைகள் மற்றும் பாலூட்டிகள் போன்றவற்றின் வாழ்விடமாக உள்ளது. இங்கு சுமார் 70 வகையான பட்டாம்பூச்சிகள், 35 வகையான மீன்கள், 10 வகையான இருவாழ்விகள், 25 வகையான ஊர்வன, 5 வகையான நிலத்தில் வாழும் முதுகெலும்பற்றவை, 233 வகையான பறவைகள் மற்றும் 48 வகையான பாலூட்டிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**மேலும்**, இப்பகுதியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான முக்கிய தாவர உண்ணிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், இப்பகுதிகள் நீலகிரி–கிழக்கு மலைத் தொடர் யானைகள் காப்பகத்தின் (நீலகிரி யானைகள் காப்பகம்) ஒரு பகுதியாகவும் அமைந்துள்ளது;

**மேலும்**, இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள், பாலாற்றின் முக்கியமான நீர்ப்பிடிப்புப் பகுதியாக உள்ளது. இந்த ஆறு, ஸ்டான்லி நீர்த்தேக்கத்தில் காவேரி ஆற்றுடன் சங்கமிக்கிறது. காவேரி ஆறு மாநிலத்தின் வேளாண் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகிறது. இப்பகுதி, மதிப்பு மிக்க சந்தன மரங்கள் வளரும் இயற்கை வனப்பகுதியாகவும், இதன் பாதுகாப்பு இயற்கை சந்தன மரங்களை மீள் உற்பத்திக்கு முக்கிய பங்காற்றும்;

**எனவே, இப்போது**, வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972 (1972–ம் ஆண்டின் 53வது மத்திய சட்டம்) இன் பிரிவு 26–A–இன் உட்பிரிவு (1)– உட்கூறு (b) மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர், ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டத்தில் உள்ள காப்புக்காட்டு பகுதிகள் சூழலியல், தாவரங்கள், விலங்குகள் மற்றும் இயற்கை முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் என்று கருதி, வன உயிரினங்கள் மற்றும் அதன் சூழலைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காக கீழே விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நாற்புற எல்லைக்குள் அடங்கிய காப்புக்காட்டு பகுதிகளை 30.01.2024 நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் தந்தை பெரியார் வனஉயிரின சரணாலயமாக அறிவிக்கிறார்.

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்டத்தின் பெயர் | : | ஈரோடு |
| 2. | தாலுகாக்களின் பெயர் | : | அந்தியூர் |
| 3. | சரணாலயத்தின் பெயர் | : | தந்தை பெரியார் வன உயிரின சரணாலயம் |
| 4. | சரணாலயத்தின் பரப்பளவு | : | 80,114.80 ஹெக்டேர் அல்லது **801.148** சதுர கிலோ மீட்டர் |

<u>சரணாலயமாக அறிவிக்கை செய்யப்படும் காப்புக்காடுகளின் விவரம்</u>

| வ.எண். | காப்புக்காடுகளின் பெயர் | காப்புக் காடுகளின் பரப்பளவு (ஹெக்டேரில்) | சாலைகள், பாதைகள் மற்றும் குடியிருப்பு பகுதிகளைத் தவிர்த்து சரணாலயத்தின் பரப்பளவு (ஹெக்டேரில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | வடபர்கூர் காப்புக்காடு | 47,593.39 | 47,323.50 |
| 2 | தெற்கு பர்கூர் காப்புக்காடு | 24,880.99 | 24,736.80 |
| 3 | தாமரைக்கரை காப்புக்காடு | 3,066.55 | 3,037.37 |
| 4 | தெற்கு பர்கூர் காப்புக்காடு (பகுதி 844) | 2,530.02 | 2,521.28 |
| 5 | எண்ணமங்கலம் காப்புக்காடு | 2,270.33 | 2,269.37 |
| 6 | நகலூர் காப்புக்காடு | 226.48 | 226.48 |
| | **மொத்தம்** | 80,567.76 | 80,114.80 |

**எல்லைகள் விவரம்**

வடக்கு. – இந்த வனஉயிரின சரணாலயத்தின் எல்லையானது, அந்தியூர் – கொள்ளேகால் நெடுஞ்சாலை பாலாற்றைக் கடக்கும் இடத்தில் உள்ள வனஎல்லை கல் எண். 1–லிருந்து எல்லை தொடங்குகிறது, மேலும் இந்த எல்லை பொதுவாக பாலாற்றின் தென்கரையின் வழியாக சென்று, ஈரோடு மாவட்டத்தில் உள்ள வடக்கு பர்கூர் காப்புக்காடு, தருமபுரி மாவட்டத்தில் உள்ள எண். 32 நாகமரை கிராமத்தின் ஏமனூர் குக்கிராமம் மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள எண். 01. காவேரிபுரம் கிராமம் எல்லைகள் சந்திக்கும் பொதுவான முச்சந்திப்புள்ளியை அடைகிறது.

கிழக்கு. – அங்கிருந்து எல்லை பொதுவாக தெற்கு திசையில் சென்று எண். 01 காவேரிபுரம் கிராமம் மற்றும் பச்சப்பாலமலை காப்புக்காடுகளின் மேற்கு எல்லை வழியாக தெற்கு திசையில் சென்று, சேலம் மாவட்டத்தில் உள்ள பச்சப்பாலமலை காப்புக்காடு மற்றும் எண். 02. இலக்கம்பட்டி கிராமம் மற்றும் ஈரோடு மாவட்டத்திலுள்ள வடக்கு பர்கூர் காப்புக்காடுகளின் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது. அங்கிருந்து இந்த எல்லை பொதுவாக கிழக்கு திசையில் சென்று எண். 02 இலக்கம்பட்டி கிராமத்தின் வடக்கு எல்லை வழியாக சென்று, பின்பு தெற்கு திசை திரும்பி அக்கிராமத்தின் மேற்கு எல்லை வழியாக சென்று மீண்டும் கிழக்கு மற்றும் வடகிழக்கு திசையில் சென்று எண்.02 இலக்கம்பட்டி கிராமத்தின் தெற்கு மற்றும் தென்–மேற்கு எல்லைகள் வழியாக சென்று சேலம் மாவட்டத்தில் உள்ள பச்சப்பாலமலை காப்புக்காடு மற்றும் 02. இலக்கம்பட்டி கிராமத்தின் சந்திப்புப் புள்ளியை அடைகிறது. அங்கிருந்து, இந்த எல்லை தென் கிழக்கு திசையில்

சென்று சேலம் மாவட்டத்தில் உள்ள பச்சப்பாலமலை காப்புக்காடு மற்றும் ஈரோடு மாவட்டத்தில் உள்ள வடக்கு பர்கூர் காப்புக்காட்டின் எல்லை வழியாக சென்று பச்சப்பாலமலை காப்புக்காடு மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள எண். 06. ஆலமரத்துப்பட்டி கிராமத்தின் சந்திப்புப் புள்ளியை அடைகிறது. அங்கிருந்து, எல்லை தென்–கிழக்கு திசையில் சென்று எண் 06. ஆலமரத்துப்பட்டி கிராமத்தின் வடகிழக்கு எல்லை வழியாக சென்று பின் தெற்கு திசை திரும்பி அக்கிராமத்தின் மேற்கு எல்லை வழியாக சென்று சேலம் மாவட்டத்தில் உள்ள எண்.06 ஆலமரத்துப்பட்டி கிராமம் மற்றும் ஈரோடு மாவட்டத்தில் உள்ள எண் 02. கொமராயனூர் கிராமம் ஆகியவை சந்திக்கும் சந்திப்பு புள்ளியை அடைகிறது.

**தெற்கு.** – அங்கிருந்து இந்த எல்லை பொதுவாக தென்மேற்கு திசையில் சென்று, எண். 03. புதூர் கிராமம், எண் 04. சென்னம்பட்டி கிராமத்தின் வடக்கு எல்லைகள் வழியாக சென்று எண் 04. சென்னம்பட்டி கிராமம் மற்றும் எண். 06. வெள்ளித்திருப்பூர் கிராமங்கள் ஆகியவை சந்திக்கும் சந்திப்புப் புள்ளியை அடைகிறது. அங்கிருந்து இந்த எல்லை பொதுவாக தென் கிழக்கு திசையில் சென்று எண்.06 வெள்ளித்திருப்பூர் கிராமத்தின் வடக்கு எல்லைகள் வழியாக சென்று பின்பு வடக்கு திசை நோக்கி திரும்பி அக்கிராமத்தின் வடக்கு, மேற்கு மற்றும் தென் மேற்கு எல்லைகள் வழியாக செல்கிறது. அங்கிருந்து தெற்கு திசையில் திரும்பி எண்.07 மாத்தூர் கிராமத்தின் வடமேற்கு மற்றும் வடக்கு எல்லைகள் வழியாக செல்கிறது. அங்கிருந்து இந்த எல்லை பொதுவாக கிழக்கு திசையில் சென்று, எண். 08 எண்ணமங்கலம் கிராமத்தின் வடக்கு எல்லைகள் வழியாக சென்று வடக்கு திசையில் திரும்பி அக்கிராமத்தின் கிழக்கு, வடக்கு, மேற்கு மற்றும் வடக்கு எல்லைகள் வழியாக செல்கிறது. அங்கிருந்து இந்த எல்லை தொடர்ந்து கிழக்கு திசையில் சென்று எண்.08 எண்ணமங்கலம் கிராமம், எண். 09. சங்கரபாளையம் கிராமம், எண். 11. அந்தியூர் கிராமம், எண். 12. நாகலூர் கிராமம், எண். 13 அத்தாணி கிராமத்தின் வடக்கு எல்லைகள் வழியாக செல்கிறது. அங்கிருந்து இந்த எல்லை கிழக்கு திசையில் சென்று எண் 11. பெருமுகை கிராமத்தின் வடக்கு, கிழக்கு மற்றும் வடகிழக்கு திசைகளின் வழியாக செல்கிறது. பின்னர் அங்கிருந்து, மேற்கு திசையில் சென்று எண் 10. கணக்கம்பாளையம் கிராமத்தின் வடக்கு எல்லை வழியாக செல்கிறது.

**மேற்கு** – பின்னர் இந்த எல்லையானது வடக்கு திசையில் சென்று, குத்தியாலத்தூர் காப்புக்காடு மற்றும் தெற்கு பர்கூர் காப்புக்காடுகளுக்கு இடையே உள்ள பொதுவான எல்லை வழியாக செல்கிறது. பின்னர் தொடர்ந்து வடக்கு திசையில் குத்தியாலத்தூர் காப்புக்காடு மற்றும் தெற்கு பர்கூர் (பகுதி) காப்புக்காடுகளுக்கு இடையே உள்ள பொதுவான எல்லைகள் வழியாக செல்கிறது. பின்னர் அங்கிருந்து வடக்கு திசையில் சென்று குத்தியாலத்தூர் காப்புக்காடு மற்றும் வடபர்கூர் காப்புக்காடுகளுக்கு இடையே உள்ள பொதுவான எல்லைகள் வழியாக சென்று எண்.02. கூத்தம்பாளையம் கிராமத்தின் தென்மேற்கு மூலையை அடைகிறது. பின் அங்கிருந்து தொடர்ந்து வடக்கு திசையில் சென்று எண். 02. கூத்தம்பாளையம் கிராமத்தின் வடகிழக்கு மூலையை அடைகிறது. பின்னர், இந்த எல்லை தொடர்ந்து வடக்கு திசையில் சென்று பாலாறு ஆற்றின் கரை வழியாக சென்று குட்டையூர் குக்கிராமத்தின் வடமேற்கு மூலையை அடைந்து தெற்கு நோக்கி திரும்புகிறது. பின்னர் இந்த எல்லை குட்டையூர் குக்கிராமத்தின் மேற்கு,

தெற்கு, தென்–கிழக்கு மற்றும் வடகிழக்கு வழியாக சென்று மீண்டும் தமிழ்நாடு – கர்நாடகா மாநிலங்களுக்கு இடையேயான எல்லையை அடைகிறது. பின்னர், இந்த எல்லை பாலாறு ஆற்று கரையோரம் வழியாகவும் தமிழ்நாடு – கர்நாடகா இரு மாநில எல்லைகள் வழியாகவும், இக்கரையோரத்தில் அமைந்துள்ள மட்டிமரத்தள்ளி மற்றும் வேலம்பட்டி ஆகிய இரு குக்கிராமங்களைத் தவிர்த்து, பாலாற்றின் கரையோரமாகவே தொடர்ந்து சென்று தொடங்கிய இடத்தை அடைகிறது.

**விலக்களிக்கப்பட்டவை**

பின்வரும் சாலைகள், பாதைகள் மற்றும் உள்ளடைப்பு குடியிருப்பு பகுதிகள் தந்தை பெரியார் வன உயிரின சரணாலயத்திலிருந்து விலக்களிக்கப்படுகிறது : –

**(i) சாலைகள் மற்றும் பாதைகள்**

| வ. எண் | சாலை / பாதை ஆரம்ப இடம் (புவியிட குறியீடுகளுடன்*) | முடியும் இடம் (புவியிட குறியீடுகளுடன்*) | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) |
|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) |
| (i) | செல்லம்பாளையம் வனச் சோதனைச் சாவடி (தெற்கு பர்கூர் காப்புக்காடு) | பாலாறு (வடபர்கூர் காப்புக்காடு) | 34.15 | 7.50 |
| | அட்சரேகை : வ 11.66623°<br>தீர்க்கரேகை : கி 77.57258° | அட்சரேகை : வ 11.94197°<br>தீர்க்கரேகை : கி 77.49321° | | |
| (ii) | எண்ணமங்கலம் கிராமம் பு.ல.எண். 2/2 | காக்கயனூர் பழங்குடியினர் குடியிருப்பு (தெற்கு பர்கூர் காப்புக்காடு) | 1.46 | 7.50 |
| | அட்சரேகை : வ 11.65720°<br>தீர்க்கரேகை : கி 77.56742° | அட்சரேகை : வ 11.66443°<br>தீர்க்கரேகை : கி 77.55931° | | |
| (iii) | அந்தியூர் (அ) கிராமம் பு.ல.எண்.196/4 | கிணத்தடி பழங்குடியினர் குடியிருப்பு (தெற்குபர்கூர் காப்புக்காடு) | 0.54 | 7.50 |
| | அட்சரேகை : வ 11.63403°<br>தீர்க்கரேகை : கி 77.54913° | அட்சரேகை : வ 11.63824°<br>தீர்க்கரேகை : கி 77.54691° | | |

| | | | |
|---|---|---|---|
| (iv) கரும்பாறை கிராமம் | தொட்டக்கோம்பை பழங்குடியினர் குடியிருப்பு (தெற்குபர்கூர் காப்புக்காடு) | 2.43 | 7.50 |
| அட்சரேகை : வ 11.55806°<br>தீர்க்கரேகை : கி 77.45353° | அட்சரேகை : வ 11.57955°<br>தீர்க்கரேகை : கி 77.45925° | | |
| (v) தாமரைக்கரை கிராமம் | தேவர்மலை கிராமம் (தாமரைக்கரை காப்புக்காடு) | 4.47 | 7.50 |
| அட்சரேகை : வ 11.76438°<br>தீர்க்கரேகை : கி 77.56465° | அட்சரேகை : வ 11.77074°<br>தீர்க்கரேகை : கி 77.59503° | | |
| (vi) தாமரைக்கரை கிராமம் | சுண்டபூர் (தாமரைக்கரை காப்புக்காடு) | 2.49 | 7.50 |
| அட்சரேகை : வ 11.77964°<br>தீர்க்கரேகை : கி 77.54688° | அட்சரேகை : வ 11.78888°<br>தீர்க்கரேகை : கி 77.56094° | | |
| (vii) தாமரைக்கரை கிராமம் | பெரிய செங்குளம் கிராமம் (தெற்கு பர்கூர் பகுதி காப்புக்காடு) | 11.33 | 7.50 |
| அட்சரேகை : வ 11.76641°<br>தீர்க்கரேகை : கி 77.55497° | அட்சரேகை : வ 11.73446°<br>தீர்க்கரேகை : கி 77.49270° | | |
| (viii) தொள்ளி கிராம பிரிவு | தொள்ளி கிராமம் (தாமரைக்கரை காப்புக்காடு) | 1.64 | 7.50 |
| அட்சரேகை : வ 11.76772°<br>தீர்க்கரேகை : கி 77.54482° | அட்சரேகை : வ 11.77270°<br>தீர்க்கரேகை : கி 77.53343° | | |
| (ix) தாளக்கரை கிராம பிரிவு | தாளக்கரை கிராமம் (தாமரைக்கரை காப்புக்காடு) | 0.55 | 7.50 |
| அட்சரேகை : வ 11.75942°<br>தீர்க்கரேகை : கி 77.53248° | அட்சரேகை : வ 11.75459°<br>தீர்க்கரேகை : கி 77.53216° | | |

| | | | |
|---|---|---|---|
| (x) துருசனம்பாளையம் கிராமம் | சோளகனை கிராமம் (வடபர்கூர் காப்புக்காடு) | 5.73 | 7.50 |
| அட்சரேகை : வ 11.82286° <br> தீர்க்கரேகை : கி 77.54411° | அட்சரேகை : வ 11.58056° <br> தீர்க்கரேகை : கி 77.57989° | | |
| (xi) அச்சப்பன் கோவில் | உள்ளூர் தண்டா (வடபர்கூர் காப்புக்காடு) | 10.6 | 7.50 |
| அட்சரேகை : வ 11.73280° <br> தீர்க்கரேகை : கி 77.67253° | அட்சரேகை : வ 11.80987° <br> தீர்க்கரேகை : கி 77.70179° | | |
| (xii) பர்கூர் இணைப்பு சாலை | சுண்டபூர் சாலை சந்திப்பு (வடபர்கூர் காப்புக்காடு) | 16.17 | 7.50 |
| அட்சரேகை : வ 11.84243° <br> தீர்க்கரேகை : கி 77.63485° | அட்சரேகை : வ 11.78116° <br> தீர்க்கரேகை : கி 77.55293° | | |
| (xiii) கரிக்காடு | பாலார் பாலம் (வடபர்கூர் காப்புக்காடு) | 4.83 | 7.50 |
| அட்சரேகை : வ 11.93005° <br> தீர்க்கரேகை : கி 77.67993° | அட்சரேகை : வ 11.95384° <br> தீர்க்கரேகை : கி 77.64960° | | |
| (xiv) காவேரிபுரம் கிராமம் பு.ல.எண்.509 | கத்திரிமலை பழங்குடியினர் குடியிருப்பு (வடபர்கூர் காப்புக்காடு) | 6.93 | 7.50 |
| அட்சரேகை : வ 11.90096° <br> தீர்க்கரேகை : கி 77.68271° | அட்சரேகை : வ 11.89938° <br> தீர்க்கரேகை : கி 77.65152° | | |
| (xv) உள்ளூர் தண்டா | அந்தியூர் –கொள்ளேகல் நெடுஞ்சாலை (வடபர்கூர் காப்புக்காடு) | 28.91 | 7.50 |
| அட்சரேகை : வ 11.83656° <br> தீர்க்கரேகை : கி 77.65410° | அட்சரேகை : வ 11.93413° <br> தீர்க்கரேகை : கி 77.49735° | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (xvi) | குட்டையூர் கிராமம் | மாக்கம்பாளையம் கிராமம் (வடபர்கூர் காப்புக்காடு) | 2.90 | 7.50 |
| | அட்சரேகை : வ 11.77032 °<br>தீர்க்கரேகை : கி 77.43517° | அட்சரேகை : வ 11.75089°<br>தீர்க்கரேகை : கி 77.42571° | | |
| (xvii) | வேலாம்பட்டி கிராமம் | மத்திமரத்தள்ளி கிராமம் (வடபர்கூர் காப்புக்காடு) | 2.82 | 7.50 |
| | அட்சரேகை : வ 11.89149°<br>தீர்க்கரேகை : கி 77.47555° | அட்சரேகை : வ 11.88244°<br>தீர்க்கரேகை : கி 77.46111° | | |
| (xviii) | தாமரைக்கரை – கொங்காடை சாலை | தும்மரட்டி (வடக்கு பர்கூர் காப்புகாடு) | 0.12 | 7.50 |
| | அட்சரேகை : வ 11.74146°<br>தீர்க்கரேகை : கி 77.49910° | அட்சரேகை : வ 11.74251°<br>தீர்க்கரேகை : கி 77.49941° | | |
| (xix) | தாமரைக்கரை – கொங்காடைசாலை | ஒன்னகரை சாலை | 0.20 | 7.50 |
| | அட்சரேகை : வ 11.74915°<br>தீர்க்கரேகை : கி 77.50569° | அட்சரேகை : வ 11.75087°<br>தீர்க்கரேகை : கி 77.50603° | | |
| (xx) | மடம் | அனைப்போடு வனச்சாலை | 0.84 | 5.50 |
| | அட்சரேகை : வ 11.73500°<br>தீர்க்கரேகை : கி 77.63087° | அட்சரேகை : வ 11.73974°<br>தீர்க்கரேகை : கி 77.63407 | | |
| (xxi) | செங்குளம் | குட்டையூர் சாலை | 6.43 | 5.50 |
| | அட்சரேகை : வ 11.73283°<br>தீர்க்கரேகை : கி 77.46219° | அட்சரேகை : வ 11.77267°<br>தீர்க்கரேகை : கி 77.44154° | | |

* அனைத்து புவியிடகுறியீடுகளும் தசம பாகையிலும் WGS 84 அளவீடுகளின் அடிப்படையிலும் குறிக்கப்பட்டுள்ளன.

**(ii) பழங்குடியினர் குடியிருப்பு பகுதிகள்**

| வ. எண் | பழங்குடியினர் குடியிருப்பின் பெயர் | காப்புக்காடுகளின் பெயர் | பரப்பளவு (ஹெக்டேரில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | தாமரைக்கரை | தாமரைக்கரை காப்புக்காடு | 16.82 |
| 2. | சோளகனை | வடபர்கூர் காப்புக்காடு | 140.50 |

| | | | |
|---|---|---|---|
| 3. | நடுக்காவல்திட்டு | வடபர்கூர் காப்புக்காடு | 54.00 |
| 4. | காக்காயனூர் | தெற்குபர்கூர் காப்புக்காடு | 45.00 |
| 5. | கிணத்தடி | தெற்குபர்கூர் காப்புக்காடு | 16.80 |
| 6. | தொட்டக்கோம்பை | தெற்குபர்கூர் காப்புக்காடு | 69.00 |
| | **பழங்குடியினர் குடியிருப்புகளின் மொத்த பரப்பளவு** | | 342.12 |

**பொது:-**

தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (1882 ஆம் ஆண்டு V சட்டம்) பிரிவு 16ன் கீழ் காப்புக்காடாக அறிவிக்கை செய்யப்பட்டு, இந்த சரணாலயத்தின் ஒரு பகுதியாக இருக்கும் காப்புக்காடுகளை பொறுத்த வரையில், பிரிவு 16-ன் கீழ் அறிவிக்கையில் அனுமதிக்கப்பட்ட வழித்தட உரிமைகள் மற்றும் பிற அனுமதிகள் பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம் 2006 (மத்திய சட்டம் 2, 2007)-இல் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றமின்றி தொடரும்.

*******

சுப்ரியா சாகு,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

30.1.24
பிரிவு அலுவலர்
30.1.24